# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளிவருவது

Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூச] பாற்ப்பாணம்:- நந்தன வருஷம் மார்கழி மீ கசூ உ செவ்வாய்க்கிழமை (30 Dec. 1952) [இல - எஉ]


# சங்கமிருந்து மொழியாராய்ந்த தனிமுதல்!

## சைவமுந்தமிழும் ஒன்றெனுஞ்சான்று

## "செந்தமிழ்ச் சொக்கர்"

ஆண்டவனை மொழியோடு தொடர்பு படுத்திப் பேசுகின்றநிலை தமிழ்நாட்டிற்கே சிறப்பாக அமைந்த தொன்று.

மொழியை இறைவன் தோற்று வித்தானென்பதும், மொழியிலக் கணத்தை அவனே வரம்புசெய்து ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினனெ ன்பதும் தமிழ் மொழியைப்பற்றி நிற்கின்ற வரலாற்று உண்மைகள்.

"சொக்கர்" என்பது ஒரு தனித் தமிழ்ச் சொல். இச்சொல் லின் பொருளும், "முருகன்" என்ற சொல்லின் பொருளும் விரிவால் ஒற்றுமையுடையன என் பதை அறிஞர்கள் நன்கு அறி வார்கள். "சொக்கர்" என்ற சொல்லுக்கு நூல்களின் வாயிலா கவும், அறிஞர்களின் வாயிலாக வும், கேட்கப்பெறுகின்ற பொருள் கள் ஒருபுறம் இருக்க, சாதாரண மக்களுடைய பேச்சில், இச்சொல் மிகச் சிறந்த பொருள்கள் தோன்ற வெளிவருவதை அறியலாம்.

இறைவனை இன்பப் பொருளாக எண்ணியதுடன் இன்பப் பொருள்களின் பெயரை இறைவனுக்குச் சூட்டி ஏத்தி மகிழ்வதில் சைவம் முன்னணியில் நிற்பது. கண்டாரை வசப்படுத்துகின்ற தன்மையுடைய பொருள்கள் உயிர் களால் பெரிதும் விரும்பப்பெறு வன. அவற்றுள் தலைசிறந்த பொருள் கடவுள் என்பதைச் சைவம் வலியுறுத்தும். இதனைத் திருக்கோவையாருக்கு உரையெழு திய பேராசிரியர் விளக்குகிறார்.

—0—

எவரையும் வசப்படுத்தும் இன்ப ஆற்றலையுடைய இறைவனை, அவ் வாற்றலைப் புலப்படுத்துகின்ற "சொக்கர்" என்ற சொல்லால் நம் முன்னோர் அழைத்தனர்.

"சொக்குப் பொடி" என்ற சொல் எல்லா மக்களிடையேயும் வழங்கிவரக் காண்கின்றோம் தொ டர்பு பெற்றாரை வசப்படுத்து கின்ற பொடி என்பதுதானே இச்சொல்லின் பொருளாக அமைந் திருக்கின்றது? இச்சொற்பொரு ளின்படி இறைவனைச் சொக்கன் என்று வழங்குவதில் ஏதும் தடையுண்டோ?

### 'மாசிலா மணி'

இனிச் சொக்கு என்ற சொல்லை மாசற்றது என்னும் பொருளிலும் நாட்டுமக்கள் வழங்குகின்றார்கள்.

.... "ஞானசம்பந்தம" ....

கலப்பற்ற தூய்மையான தங்கத் தைச் 'சொக்கத் தங்கம்' என்று வழங்குவது இதனை வலியுறுத்தும். 'பூசு நீறுபோல் புனிதனாகிய மா சிலாமணியைச் சொக்கனாக நம முன்னோர் கண்டழைத்த சிறப்பு நாம நினைந்து நினைந்து மகிழ வேண்டும் நிலையில் இருக்கின்றது.

தேவாரத் திருமுறையில் திரு ஞானசம்பந்தப் பெருமான் சொக் கன் என்று ஆண்டவனைக் குறிக் கின்றார். அவ்வாறு அவர் குறிக் கும் இடம், மங்கையர்க்கரசியார் சமணர்களின் மிண்டுத் தன்மை கண்டு மயங்கி நின்றபொழுது அவரைத் தேற்றிய இடமாகும். கண்டாரை வசப்படுத்தும் கவி னும் குறைவிலா நிறைவும்உடைய பெருமானாக இறைவனைக் குறிக்க வேண்டிய இடம் இது என்பதை நன்குணர்ந்து 'எக்க ராம் அமண்கையருக்கு எளியேன் அலேன் திருவாலவாய்ச் சொக்கன் என்னுள் இருக்க' என்று பிள்ளையார் திருவாக்கு வெளிவரு கின்றது.

### இனிய தமிழ் இயம்பிய இறை!

சொக்கப் பெருமான் அழகும் நிறைவும் உடையவராயிருப்பதைத் "தமிழ்ச் சொக்கர்" என்பது குறிக் கின்றது. செந்தமிழிற் பற்று வைத்துச் சங்கமிருந்து தமி ழாராய்ந்த பெருமான் அதலின் "தமிழ்ச் சொக்கன்" என்று ஏத்தப்பெறுகிறன் 'அங்காற்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### இலங்கை இந்திய மகாநாட்டுத் தலைவர்

இலங்கை இந்திய மகாநாட் டுத் தலைவராக திரு. S. தொண் டைமான் அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

### எனை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க!

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

### தமிழ் பேசத் தெரியாத தமிழ்ப்பிள்ளை!

செய்வதென்னென்றறியாது காலியிலே தயங்கி நின்ற 8 வயதுத் தமிழ்ப்பிள்ளை பொருவர் பொலீ சாரால் வதுளை நீதிபதி முன்னே நிறுத்தப்பட்டார் அத் தமிழ்ப் பிள்ளை தமிழிற்பேச அறியாது சிங் களத்திலே சிறப்புறப் பேசினார். தந்தை தாயர் பெயர் முறையே A முருகேசு, லெட்சுமி என அறிய வந்தது.

நிலைமையின் நீர்மையைக் கண்ட நீதிபதி இவர் பெரும்பான்மை யோருடன் சேர விரும்பினார் போலும் என்று குறிப்பிட்டார்

அரசியல் அலை

# புத்த பாடசாலை புதிதாக நூறு!

## 1வருடத்திட்டமூர் உணர்ச்சிஊற்றும்!!

## சைவர்கள் அசைவார்களா?

ஏந்த மதத்தைச் சேர்ந்தவர் என்றாலும் பொதுவுடைமையை எதிர்த்துப் போராட மதந் தழுவிய கல்வி வேண்டும் என்றும் அந்தந்த மதத்தினர் அவ்வம் மதப் பள்ளிக்கூடங்களிலேயே பிள்ளைகளைக் கல்வி பயிற்றுவித்தல் வேண்டுமென்றும் வாய் ஓயாது பேசுகிறார்கள். ஆனால் செய்கை யளவிலே சமரசஞானம் உதுத்துவிடும்! ...

புத்த மகாநாட்டிலே அடுத் தாண்டுத் திட்டத்திற் புதிதாக நூறு புத்த பள்ளிக்கூடங்கள் திறவப்பட வேண்டுமென்ற உறுதிமொழி கூறப்பெற்றிருக் கிறது.

சைவவித்தியாவிருத்திச் சங் கம் தொடக்கப்பெற்றிருபத்தி மூன்றாண்டுகளாகின்றன. பள் ளிக்கூடங்கள் தொகை இன்ன மும் நூற்றைம்பதாகவில்லை.

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# மது விளைத்த மதிகேடு

## குழந்தை மகனைக் கொன்ற கொடும்பாவி

மதுபானம் உண்டாக்கிய மதி மயக்கத்தால் குழந்தை மகனைத்தந்தை கொன்ற வழக் கொன்று கண்டி உயர்தர நீதி மன்றத்தில் உயர்நீதிபதி திரு. S. S. J. குணசேகர அவர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு எதிரி ஆறுவருடக் கடூழிய விதிக்கப்பட்டார்.

இந்த வழக்கில் கண்டிப்பகுதி யைச் சேர்ந்த நுகலியத்த என் னும் கிராம வாசியாகிய R. N. கிரிபண்டா என்னும் கொடிய வன் குடிவெறி யுண்டாக்கிய மதிமயக்கத்தால் தனது மனை வியின் கையிலிருந்து பால் குடித்துக்கொண்டிருந்த மூன்று மாசக் குழந்தை மகனைக் காலிற்பிடித்து இழுத்து நிலத் தில் இருமுறை மோதினன். குழந்தை இறந்தது, தாய் அலறினள்.

வெறி சிறிது குறைந்ததும் வைத்தியரை வருவித்துப் பிள்ளைக்கு வலியென்று வெறும் பொய் விரித்துரைக்க முயன் றான். நம்புவார் ஒருவருமில்லை. வழக்குத் தொடரப்பட்டது. குடிவெறியாலேயே இவ்வாறு மிருகத்தனமாய் நடந்தாய், நீ குடிக்கமுடியாத இடத்துக்கு உன்னை அனுப்புகிறேன் என்று சொல்லிக் குறித்த தண்டனை யை நீதிபதி விதித்தார்.

# பழந் தமிழரின் பல்கலைத் திறமை

## பத்துப் பாட்டின் பண்பு

பத்துப்பாட்டு என்னும்நூல் சங்க இலக்கியங்களில் மிகத் தொன்மையானதும் பெருஞ் சிறப்புக் குரியதுமான தூய தமிழ்நூல். பழந்தமிழரின் பல்கலைத் திறமையையும் உய ரில் சமயப் பண்பாட்டையும் எடுத்துக் காட்டும் கலங்கரை விளக்கமென்று கூறுவது மிகையாகாது. தமிழ் நாட் டின் பண்டைய வரலாற்றை உறுதிப்படுத்துவதற்கு உறு துணையாய் நிற்பது. இப்பத் துப்பாட்டில் ஆற்றுப்படை ஐந்தும், அகப்பொருட்பாட்டு நான்கும் புறப்பாட்டு ஒன்று மாக பத்தாகும். ஆற்றுப் படை என்பது ஆற்றுப படுத்துதல் ... அருள் பெற்ற ஒருவர் அவ்வரு ளுக்குத் தகைமையுடைய மற் றொருவரை இறைவன் முன் னிறுத்தி அறிமுகப் படுத்தி அவரையும் ஆட்கொள்ளச் செய்தல். ஆற்றுப் படை களைப்பற்றிப் பின்னர் விரிவாகக் கூறுகின்றேன்.

### மருத்துவக் குறிப்புக்கள்

இப்பத்துப் பாட்டில் மருத் துவக் குறிப்புக்கள் மலிந்துள் ளன. இங்கு ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட அவாவுகிறேன். பத்துப் பாட்டில், (கறி) - மிள கைப்பற்றி, எவ்வாறு கூறப் பட்டுள்ள தென்பதை நோக்கு வாம். திருமுருகாற்றுப்படை பத்துப்பாட்டில் தலை சிறந்து விளங்குவது; இது நக்கீ ரால் முருகப் பெருமான்மேல் பாடப்பெற்ற தென்பதை அறி யாதார் தமிழுலகில் இலர். இதில் ஆறுவதுபடை வீடா கக் கருதப்படும் பழமுதிர் சோலையைச் சொலலோவியத் தால் வரைந்து காட்டிய நக்கீ ரர், "கறிக்கொடி கருந்துணர் சாயப் பொறிப்புற மடமந்தி மஞ்ஞை பலவுடன் வெரீஇ" எனக்கூறி; மிளகுக் கொடிக ளிலுள்ள கொத்துக்கள் அங்கு மிகவும் சாய்வதில், மயில்கள் பயந்து வெருண்டு திரிவதாக, அழகாய் அமைத்துக் காட்டு கின்றனர். சிறுபாணாற்றுப் படையில் "பைங்கறி நிவந்த பலவின நீழல் மஞ்சள் மெல் லிலை மயிர்ப்புறந் தைவர" என்று பலாமரத்தின் நிழலிலே பசிய மிளகுக் கொடி படர்ந்திருப் பதை இயற்கை வனப்போடு காட்டுகின்றனர்.

'காலின் வந்த கருங்கறி மூட்டையும்' என்பது பட்டி னப்பாலை. மதுரைக் காஞ்சி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹூ மார்கழி மீ கசுஉ செவ்வாய்க்கிழமை

## திருவெம்பாவைத் திருநாட்கள்

=O=

மார்கழித் திங்களில் வளர்மதி நிறைந்து வளம் பெறும திருவாதிரைநாள் ஈறாகவுள்ள பத்து நாட்களும் சைவர்களாற் பெரிதும் புனிதமாகப் போற்றப்படுவன வென்றால் அந்நாட்களிலே அன்பாய் ஓதப்படும் திருவெம்பாவைப் பாடல்களை ஆக்கிய தில்லைமன்றினுள் மறைந்த சிவஞானச் செல்வர் மணிவாசகஅடிகளின் இறைஉணர்ச்சிஎத்துணைத் தென்றுரைக்கவும் வேண்டுங்கொல்.

கல்லுங் கரையச் சொல்லும் பொருளும் சுவைக்கத் தில்லை அம்பலத் தண்ணலை மெய்யுணர்விற் கண்டு களிப்பெய்திய அநுபவ உண்மைகளை உள்ளங்கொள்ளும் ஒப்பிலா உணர்ச்சி உரையாகத் திருவாதவூரடிகள் தந்த திருவாசக மணிகளுள்ளே திருவெம்பாவைத் திருப்பாடல்களை மார்கழியிலே இந்தப் பத்து நாட்களிற்றானும் பரிவுடன் பாடப்படுவதே பெரும்பயன் அளிக்குமென்றாற் கண்ணைத் துயின்றவமே! காலத்தைப் போக்காதுவைகறைப்பொழுதில் எழுந்து நீராடி ....

"புகழ்மின் தொழுமின்
பூப்புனைமின் புயங்கன் தாளே
புந்தி வைத்திட்
டிகழ்மி னெல்லா அல்லலையு
மினியோ ரிடையூ
றடையாமே
திகழந் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள்
வணங்கி நாம்
நிகழ மடியார் முன் சென்று
நெஞ்ச முருகி நிற்போமே!

என, எம்பெருமானை இமைத் தமர்த்தி யின்பந் துய்க்கஎண்ணுதுவிட மனம் ஒருப்படுமா?

திருவெம்பாவைத் திருநாட்களிலே திருவாதவூரடிகள் புராணம் படிப்பிப்பதை முன்னோர்முறையாக வமைத்தமை அன்னாரின் அறிவின் பெருமையைக் காட்டுகின்றது. வேத உபாங்கமாகிய பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய காந்தபுராணத்தே யுள்ள இப்புராணம் சைவசித்தாந்தப் பேருண்மைகளைத் திரட்டிச் சிறவருமறிந்து செப்பருநலம் பெறத் தெள்ளிய நடையில் அள்ளமுதனைய பாக்களில் உரைக்கின்றது.

இப்பெரும் பெற்றி வாய்ந்த புராணமாமிதைத் திருவெம்பாவைக் காலங்களிற் கிரமமாக ஆலயங்கடோறும் படித்துப் பயன் கொளவேண்டிய நெறி இந்நாட்களில் நன்கு கடைப்பிடிக்கப்படுவதில்லையென்று முன்னர் கூறியுள்ளாம். இப்போதைய கலவி முறையிற் சைவசமய அறிவும் ஓர் பாடமாகக் கொள்ளப்படுதலாற் சைவச்சிறார் கள் ஆன்ம ஈடேற்ற நோக்காதுவிடினும வாழ்சைக்கின்றியமையாதவண் உடை தேடும் முயற்சிக்காவது உதவக்கூடியதாயிருக்கும். சமயபாடங்களை இலகுவாக அறிவதற்குத் திருவாதவூரடிகள் புராணம்போன்ற சிறந்த நூல்கள் மிகச் சிலவே. எனவே சைவக் கழகங்கள் இப்புராணபடனத்தைத் திருவெம்பாவைத் திருநாட்களிலே ஆலயங்களெல்லாவற்றிலும்முறைப்படி நிகழ்த்த முயற்சிப்பார்களாக.

இன்னமும் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலிற் குருவாயமர்ந்து சிவஞானஞ் செப்பிய திருப்பெருந் துறைச் சருக்கச் செய்யுட்களிலுரிய பகுதியை ஒரு தனிப் பதிப்பாக அச்சிட்டு மாணவர்களுக்குச் சைவ சித்தாந்த மெய்யுண்மைகளின் பொழிப்பை அன்னார் நயந்து கற்றற்குரியமுறையில் வெளியிடவேண்டும் என்று சைவ நூற் பதிப்பாளர்களுக்கு நன்மொழி பகருகிறேம்! அவ்வாறே புத்தரை வாதில் வென்ற சருக்கத்திலுள்ள தருக்க ஆற்றலைக் காட்டும் செய்யுட்கள் சைவசமய உண்மை ஆதாரத்தையும் புறச்சமய விருண் மயக்கத்தையும் விளக்குகின்றன வாகையால் அவற்றைப் பள்ளிக்கூடமாணவர்கள் அறிவது அவர்களது சமய பாடப் பயிற்சிக்கு உதவியாயிருக்கும்.

இவ்வாறு திருநாட்களை நெறிப்படி கொண்டாடுவதுமன்றி அக் காலங்களிலறிய வேண்டிய அரிய சைவநுண்பொருள் விளக்கத்தையும் பலரும் ஆய்ந்துணர்வதற்குரிய வழியிற் சைவ நிலையங்கள் திட்டமிட்டுழைத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றேம்.

## எமது அறிவித்தல்

வருகிற புதன்கிழமை (31—12—52) திருவாதிரைத் திருநாளாகலின் இந்துசாதன நிலையத்திலும் சைவப்பிரகாச யந்திரசாலையிலும் கடமையாற்றுவோர்க்கு இந்நாள் விடுமுறையாக்கப்படுதலால் இந்நாளிற் குறித்த நிலையங்கள் மூடப்படுமென்று அபிமானிகளுக்கு அறியத் தருகிறேம்.

அதிபர்

சாராயநீக்கம்:

# போடுங்கள் X புள்ளடி
# வேண்டாம் என்று!

இராமு: அப்பா! அப்பா!! எங்கள் பாடசாலையல் இன்றைக்கு ஒரு கூட்டம்.... நடந்தது!!!

தகப்பன்: என்ன கூட்டமடா இராமு? ..........

இராமு: வருகிற 3-1-53 சனிக்கிழமை சங்கானை சாராயத் தவறணை வேண்டாமென்று எடுப்பதற்கு ஒரு தேர்தல் நடக்கப்போகிறதாம்!

தக: ஓகோ! ஓகோ!

இரா: அப்பா! நீங்கள வேண்டாம் என்றுதானே புள்ளடி போடுவீர்களா?

தக: நான் வேண்டுமென்றுதானே போடுவேன்.

இரா: அப்பா! வேண்டாமென்றுபோட்டாலென்ன?

தக: வேண்டாம் என்று போட்டால் சாராயத்தவறணை எடுபட்டுப்போம்; நான் குளிருக்குக் குடிக்காமல் இருக்க முடியுமோ? இராமு.

இரா: அப்பா! நீங்கள் வேண்டுமென்று போட்டால் சாராயத் தவறணை எடுபடாது

செல்வன்
சு. கணேசன் (சுழிபுரம்)

பாடசாலையில படிக்கும் மாணவர்களாகிய நாங்கள் பெற்றோராகிய உங்களைப் பார்த்துக் குடிக்கப் பழகிவிடுவோம் அல்லவா? ... ... ....

தக: உனக்குச் சாராயமா வேண்டும்? பயலே! முதுகிற்றோல் உரித்துவிடுவேன் பார்!

இரா: அப்பா, நாங்கள வயதுவந்து ஒரு குடும்பத்தை நடாத்துமபோது ஆர் (எங்களது) முதுகிற்றோலை உரிப்பவர்கள்? அந்த நோத்திலே பழகுவோந்தானே! .........

தக: தம்பி! குடிக்காமல் இருக்கும் மேலான பழக்கத்தை நீ பழகிக்கொள்; அது உன்னால் முடியும்.

இரா: சாராயத் தவறணை இருந்தால் ....... (இருப்பதால்) சிநேகிதர்களுடன் சேர்ந்து குடிக்கத்தான்செய்யும் அப்பா, அவலாமலும், தகப்பனுடைய செயலைப் பார்த்து மகனும் செய்வான் என்று ஒரு பழமொழி இல்லையோ. ........ பின்பு எங்களைப் பார்த்து எங்கள் பிள்ளைகளும குடிக்கப் பழகுவார்கள்தானே?

தக: ஐயையோ! என் அருமை இராமு வனடா அப்படிச் சொல்கிறாய்? நீங்கள நல்லாய் இருந்தாலல்லவோ நாங்களும் நலமேபர் எடுக்கலாம். ... ...

இரா: அப்படியானால் நீங்கள் சாராயத் தவறணை வேண்டாம் என்று புள்ளடி போடுவீர்களா? ஓம்! ஓம்!!

தக: மகனே! நீ எனக்கு நல்லதோர் பழக்கத்தைப் பழக்கிவிட்டாய்; நான் குடிக்க முடியாவிட்டாலும் இனி. சாராயத் தவறணை வேண்டாமென்று புள்ளடிபோடுகிறேன் அப்படிப் போட்டாற்றானே எங்கள பிள்ளைகளை நல்லொழுக்கம் உடையவர்களாகக் கொண்டுவர முடியும்?

இரா: பெரிய உபகாரம் அப்பா! இப்படிச் செய்வதால் வருங்காலச் சந்ததிக்கும் நல்லொழுக்கப் பாதையைக் காட்டியவராவீர்கள். நமஸ்காரம நேரமாகிறது, நான் விளக்கேற்றிப் பாடங்களைப் படிக்கப்போகிறேன்.

### சந்திரனைப் பற்றிய சந்தேகம்

பூமியிலிருந்து டல்லாயிரம் மைல் தூரத்தி லிருப்பதாகக் கொள்ளப்பட்ட சந்திரன் இப்பொழுது பூமியைச் சமீபித்து மிகச் சிலமைல தூரத்தி லிருப்பதாகக் காணக்கிடக்கிறதெனக் கூறப்படுகின்றது.

— —

### மாலைதீவுச் சுதந்திரம்

குடியரசுமுறைப்படி 1-1-53 ல் மாலைதீவுச் சுயஆட்சி தொடங்குகின்றது.

# யாழ்ப்பாணத்தில் மதுவிலக்கு

## சைவபரிபாலன சபையின் ஆதரவு

நிகழும் மார்கழி 18-ம் நாள் (1-1-53) வியாழக்கிழமை பிற்பகல் 5-30 மணியளவில் கல்லூரி வீதியிலுள்ள சபை நாவலர் மண்டபத்தில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் மதுவிலக்குப்பிரசாரக் கூட்டமொன்று நடைபெறும்.

சபைத் தலைவர் திரு. இ சிவகுருநாதர் M.B.E அவர்கள தலைமைவகிப்பர்

பேச்சாளர்கள்:-

1. முதலியார் திரு: C. முத்துத்தம்பி
2. திரு. C. வன்னியசிங்கம B. A, M. P.
3. ,, A. அமிர்தலிங்கம் B. A.
4. வித்துவான் க. கி. நடராசன் B. O. L.
5. திரு K. நவரத்தினம்
6. ,, R. N. சிவப்பிரகாசம்.

ஒலிபெருக்கி அமைக்கப்படும். யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அ. அருளம்பலம்
கௌரவ காரியதரிசி.

குறிப்பு:-

யாழ்ப்பாணப் பட்டினச் சாராயக்கடை நீக்க வாக்கெடுப்பு 10-1-53 சனிக்கிழமை நடைபெறும்.

# உலக தோற்றம்
## சைவசித்தாந்தக் கொள்கை

தத்வாராய்ச்சியாளர் கண்ட சிறந்த முடிபு கடவுள், ஆன்மா, ஆணவம ஆகிய மூன்றும் அநாதி நித்தியப் பொருள்களெனபதே. ஆணவத்தை வலிகெடுப்பமே கடவுள் ஆன்மாவுக்குப் பயனபட உலகத்தைத் தோற்றுவித்தாரென்பர் எனவே இந்த உலகம எப்படிப்பட்டது தோற்றியதெப்பொழுது. முடிவெய்துவதெப்

குமரன்

பொழுது என்ற கேள்விகளெல்லாம் எழகியாயமுண்டு. தோற்றியதெப்பொழுதென பதைப்பற்றிச் சிறிது இவண் காண்பாம். வேனயவற்றிற்கும் ஆங்கு ஒருவாறு மறுமொழி காணும்.

இவ்வுலகம 6,000 ஆண்டுகட்கு முன் தோன்றியதென்பர் சில சமயத்தார். இல்லை 20000 ஆண்டுகட்கு முன் தோற்றியதெனபர் பௌதீகர். இன்னும் வேறு முடிபுகாண்பர் சிலர். இவை எல்லாவற்றையும் கடந்து ஆதிஅநதியங் கூறுவர் சைவ சித்தாந்திகர். இவர் கூறுவதே உண்மை போலும். அதையிங்கு காண்பாம்.

உலகத்திற்கு விரிவும் ஒடுக்கமும் அநாதியாயுண்டு. ஒடுக்கம் அல்லது அழித்தல் ஆன்மாக்களின் இளைப்பை நீக்கும் பொருட்டென்பர். படைத்தல் அல்லது விரித்தல் ஆணவத்தின வலிகெடுதற்கென்று முன்னர்க் கூறினேம். உலகத்தை அறிந்து அநுபவிக்கும் ஆன்மாவும, கொடுத்துக் காண்பித்துதவும சிவனும நித்தியம. எனவே அநுபவிக்கப்படு பொருளாகிய உலகமும் நித்தியமெனபதும் பொருத்தமாகும்.

ஆன்மாக்கள் ஒவ்வொரு நாளும் பகலில் வேலைசெய்து களைத்து இரவில் உறங்கி இளைப்பாறும். இதுபோன்று தனது சீவியகாலம் வரையும் உழைத்துக் களைத்த ஒருவனுக்குச் சிவபெருமான் இளைப்பாறும் பொருட்டு மரணத்தைக் கொடுத்துதவுகிறார். இது சுமார் 70, 80 வருடகால எல்லையில் நடைபெறும்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணை தையல்நாயகி கலிவெண்பா திருவூஞ்சல் முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சல்

சைவப்பிரகாச யந்திரசாலையில் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை சதம் 25

## ஆசிரியர் தேவை

அராலி தெற்கு, சரஸ்வதி வித்தியாசாலையிற் கடமையாற்றுதற்கு பயிற்சி பெற்ற ஓர் உதவியாசிரியர் தேவை. சங்கீதம் சித்திரம் என்பனவில் விசேட தகைமையுடையோர் விண்ணப்பங்கள் விசேட மதிப்புப் பெறும்.

மானேசர்; சரஸ்வதி வித்தியாசாலை என்ற முகவரியில் 10-1-53க்கு முன்னர் விண்ணப்பிக்குக.

மு. சதாசிவம்
காரியதரிசி
அராலி சரஸ்வதி மகாசபை
25—12—52
அராலி. M209 26

## மட்டக்கிளப்பிலும் மது நீக்கம்

மட்டக்கிளப்புப் பகுதியிலுள்ள காரைதீவு, குடியிருப்பு, மண்காடு, காவற்குடா, சத்துருகொண்டான் ஆகிய இடங்களில் வசிக்கும் மக்கள் அவ்விடங்களிலுள்ள மதுக் கடைகளை நீக்கும்படி வாக்குக்கொடுத்து விட்டனர்.

கல்முனையில் கடுஞ் சமர் நடக்கின்றதாம். ஆயினும் கல்முனை மக்களும் பெரும்பான்மையோருடன் சேர்ந்து நாட்டின் நன்மைக்காக மதுக் கடை நீக்கத்திற் சித்தி பெய்தவர்களென்று நம்பப்படுகின்றது.

## விவேகானந்த வெளியீடுகள்

### திகதி - குறிப்புக்கைப்புத்தகம்

வழக்கம்போல மாணவர்களும் மற்றையோரும் நாளாந்தம் நன்னெறி முதுமொழிகளை இலகுவாகக் கருத்திலமைக்கக் கூடிய வண்ணம வாழ்க்கை ஒழுக்க நூலாம் திருக்குறளிலே இருந்து குறட் தெரிக்கப்பெற்ற பல அமைந்ததாயும், பஞ்சாங்கக் குறிப்புகள் அநேகம் உள்ளதாயும், பொது விபரங்களும் பொறிக்கப்பெற்றதாயும் அழகுற விவேகானந்த அச்சகத்திற் பதிக்கப்பெற்ற 1953-ம் ஆண்டுக்குரிய திகதி வெளியீடு எம் மதிப்புரையைப் பெறுகின்றது.

இவ்வாறே விவேகானந்த குறிப்புக் கைப் புத்தகமும் (Diary) இன்றியமையாது வேண்டிய பலபொதுக் குறிப்புகள் அடங்கியதாய் வெளிவந்திருக்கிறது. —

## சங்கமிருந்து மொழியாராய்ந்த தனிமுதல்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

கண் தழுவிய சங்கத் தமிழ்ச் சொக்கர்' என்பது குமரகுருபர அடிகள் திருவாக்கு. 'தமிழ் என்பது இனிமை நீர்மை' என்றபடி இனிமையுருவாகிய வற்றத் தமிழினிடத்தே வைத்த காதல் மிகுதியால் கயிலைவிட்டுக் கன்னி நாடாள வந்த கண்ணுதலைச் "செந்தமிழ்ச் சொக்கர்" என்று வாய் குளிரக் கூறி மகிழ்ந்தனர் நம் முன்னோர். சொக்கர் தமிழினிடத்திலே வைத்த ஆராக் காதலை இடைக்காடர் வரலாற்றில் வைத்துப் பரஞ்சோதி முனிவர் விளக்குகின்றார்.

### தமிழறியும் பெருமான்

பாண்டிய மன்னன் பொன்னிகிபோல் அளவிறந்த கல்வியும் மிக்குமான் என்று புகலக் கேட்டுச் சொல நிறைந்த கவி தொடுத்துச் சென்றார் இடைக்காடர். அரசியல் அலுவல் எதுவோ ஒன்றில் சித்தை கொடுத்திருந்த தென்னவன், புலவர் செய்யுளை மதித்துப் போற்றாதவனா யிருந்துவிட்டான். கோபங் கொண்டார் புலவர். அரசன் செய்த குற்றத்தை அரசர்க்கு அரசனாகிய ஆண்டவனிடத்துத் தானே முறையிட்டு வியாம் பெறவேண்டும்? சொக்கநாதப் பெருமானிடம் சொன்னார். ஆண்டவனை முன்னிப்படுத்தி அழைப்பதொன்றே பெருமானது தமிழன்பையும், விரைந்து நீதி வழங்க வேண்டுமென்னும் குறிப்பையும் நன்கு புலப்படுத்துகின்றது 'சங்கிலியில் வீழ்ந்தெழுந்து 'தமிழறியும் பெருமானே! தன்னைச் சார்ந்தோர் நன்னிதியே! என்பதுபரஞ்சோதியார்திருவாக்கு. சிறந்த அறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கட்பெருமானைத் "தமிழறியும் பெருமானே" என்று அழைக்கின்றார்.

தமிழறிந்த தகைமையுடையவன் பாண்டியன் என்று கேள்வியுற்றுச் செய்யுள் செய்து சென்ற புலவரை மன்னவன் மதியாதிருந்து, தனக்கிருந்த தமிழ்ப்புலமை புலப்படாகிலையில் நடந்துகொண்டான். இதனால் மனம் வருந்திய புலவர், முதலில், "தமிழறியும் பெருமானே" என்று அழைத்து இறைவனுக்கு உள்ள தமிழறிவையும் பற்றையும் தமது நினைவுக்குக் கொண்டு வருகிறார். "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் பொய்யா மொழியைச் சிந்தியுங்கள். தமிழறிந்த பெருமான் சொக்கநாதன் என்று கூறுவது பெருமானுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை நன்கு புலப்படுத்துகிறதல்லவா?

தமிழ்ச்சொக்கனுகின்ற தலைவன், இனிமைப் பண்புடையவனுதலின் தன்னைச் சார்ந்தார்க்கு நன்னிதியாக விளங்கி இன்பம் பெருக்குகிறான். இனிச், செந்தமிழ்ச் சொக்கர் திறத்தைப் பரஞ்சோதியார் பல இடங்களில் கூறியுள்ளார். நக்கீரர், தருமி ஆகியோர்களுடையவரலாற்றில்இவ்வுண்மை பெரிதும் காணக்கிடக்கின்றது.

### ஆந்திர அரசு

ஆந்திர அரசாங்க அமைப்பைப்பற்றி ஆலோசிக்க பண்டிதநேரு அவர்கள் ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் அவர்கள் Dr. K. N. கட்ஜு அவர்கள் ஆகிய மூவரும் சந்திக்கிறார்களென அறிய வருகின்றது.

## எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

திருச்சிற்றம்பலம்

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
  போற்றி யருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
  போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
  போற்றிமா லான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
  போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

## புத்த பாடசாலை புத்தாக நூறு

முதலாம் பக்கத் தொடர்ச்சி

சைவம் பரிபாலிக்கின்றவர்கள் மேடையிலும் வெளியீடுகளிலும் தங்கள் உணர்ச்சி வேகத்தைக் காட்டி விட்டுச் செய்கையளவில் வெகுதூரம் இசைவம் என்று நிற்கின்றார்கள்.

பொதுவுடைமையைப் போக்கடிக்க மதப்பற்று வேண்டுமென்றால் இப்பாற்றெங்கிருந்து வரும். தானாகவே தன்னியாக உணர்ச்சியிற்படுமா அல்லது பச்சிளம் பாலர்களுள்ளத்திலே உரிய பருவத்திலே பதிக்கப்பட வேண்டுமா?

எல்லா மதங்களும் ஓங்க வேண்டுமென்றால் மதங்களை அவ்வவ் மதத்தவர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கறிவுறுத்த தவது பள்ளிக்கூடங்கள் வாயிலாகவா பிறவேதுக்களாலா?

## உலக தோற்றம்

## சைவ சித்தாந்தக் கொள்கை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபோலச் சகல உலகத்தையுஞ் சிவபெருமான் ஊழிக் காலந்தோறும் அழித்துச் சகல ஆன்மாக்களை பிறவிதோறும் கொண்ட களைப்பை யாற்றியருளுவர். இப்படியொடுக்கப்பட்டு விரிக்கப்படுவதையே படைத்தலென்றும் உலகத் தோற்றமென்றும் உபசாரமாகச் சொல்லுவர். நித்திரை யில்லாவிட்டால் நாடோறும் வந்த இளைப்புநீங்காதென்பது எல்லோருடைய அனுபவமாகும். மரணமில்லாவிட்டாலும் ஒரு பிறவியில் வந்த இளைப்பு நீங்காதென்பதையும் அந்த நித்திரையனுபவத்தைக் கொண்டு யூகிக்கலாம். அதுபோல ஊழிக்கால ஒடுக்கத்தின் பொருத்தத்தையும் எற்கலாம். எனவே ஒடுங்கிய பின் உலகந் தோன்றுவது பக்குவப்படாத ஆன்மாக்களின் பொருட்டு வேண்டப்படுவதும், ஆன்மாக்கள பக்குவப்படுப நோக்கமாகத் திருப்பித் திருப்பிக் கடவுள் உலகத்தைத் தோற்றுவிக்கிறு ரென்பதுய விளக்கத்திற்குப் பொருத்தமானதே. இதையே சிவபெருமான் நியதியமாய் ஐந்தொழில் புரிந் தான்மாக்களை இரட்சிக்கிறார் என்ற சித்தாந்தவுண்மை சொல்லுகிறது. உலகம் அநாதிநித்தியம்.


இல்லற இன்பம் இனிதே அனுபவிக்க

பழனி, சி. எம். சாமி

அதிபலக் குளிகை

— உபயோகியுங்கள் —

அசதி, பலவீனம், நரம்புத் தளர்ச்சி முதலியவற்றை நீக்கி உடல் பலம், இந்திரியக்கட்டு, இன்ப சக்தி முதலியவற்றை உண்டாக்குகிறது! ஒருமுறை சோதியுங்கள்!!

60 குளிகை விலை ரூ 6-0-0.

ஏஜண்டு:— S. பொன்னுச்சாமி பிள்ளை,
133, தம்பகொடாதெரு, பலங்கொடை.

தலைமை ஆபீஸ்

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.


## திருவாதவூரடிகள் புராணபடனம்

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் மாணவர்களும் அங்கத்தவர்களும் சேர்ந்து மார்கழிமீ 8உ (22-12-52) தொடக்கம் (திருவெம்பாவை பத்து நாட்களும்) 17உ (31-12-52) வரையும் மாலை நேரத்தில், திருவாதவூரடிகள் புராணம், காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் வழமைபோல் படித்து வருகின்றார்கள், என்றும் மண் சுமந்த சருக்கம் விசேட படிப்பாக நடைபெறும் என்றும் பாலர் ஞானோதய சபையார் அறியத்தருகின்றனர்.

### தமிழ் நாட்டு இந்திய மகாநாட்டுத் தலைவர்

தமிழ்நாட்டு இந்திய மகாநாட்டுத் தலைவராக திரு. K [illegible] தெரிவு செய்யப்பெற்றிருக்கிறார்.


## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00.

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40.

வில்லிபாரதம் - புட்பயாத்திரைச்சருக்கம்: பண்டிதர், ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்கவிரிவுரை, நூலாசிரியர்வரலாறுமுதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S.S.C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம்பதிப்பு) விலை ரூ 1-25ச.

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணககுறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன்: மேற்படி பண்டிதர்எழுதியது; கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷ்பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1.00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.)அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T. SAMBANDHAN Vannarponnai, Jaffna


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழந் தமிழரின் பல்கலைத் திறமை

( முதலாம்பக்கத் தொடர்ச்சி )

யில், 'இஞ்சி, மஞ்சள் பைங்கறி பிறவும் பல்வேறு தாரமொடு கல்அகத்து ஈண்டி' இஞ்சியும் மஞ்சளும், பசுமையான மிளகும் குவியல் குவியலாகக் கிடப்பதைக் காட்டுகின்றனர். அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், குறுந்தொகை முதலிய நூல்களில் 'கறி' என்னுஞ் சொல் மிளகைக் குறிக்கின்றதைப் பல இடங்களிற் காண்கின்றோம்.

பெரும்பாணாற்றுப் படையில் 'சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்து உருப்புறு பசுங்காய் போழொடு கறிகலந்து கஞ்சக நறுமுறி அளைஇ' என்ற கூறுவதில் எத்தனை நயம். சிவந்த பசுவினது நல்ல மோரிலிருந்து எடுத்த வெண்ணெயில், மாதுளங்காய் பிஞ்சைப் பிளந்து, மிளகுப் பொடியோடும், கஞ்சகம், (அதிகமதுரம், கருவேம்பு Liquorice) தளிரோடும் கலந்து வேகவைத்து உண்ணுவது குறிக்கப்பட்டுள்ளது இவ்வண்ணமாக மிளகு, பசுமோர், பசுவெண்ணெய், மாதுளம்பிஞ்சு, அதிமதுரம, இஞ்சி, மஞ்சள முதலிய பொருட்களின் குணத்தை மூவாயிரம ஆண்டுகளுக்கு முன்னமே பண்டைத் தமிழர் கண்டு பயன்படுத்தி வந்தனர். 'குப்பைவேளை உப்பிலி வெந்ததை' என்ற வேளைக்கீரையின் (தைவேளை என்று இப்பொழுது அழைக்கப்படுகிறது) பெருமையும கூறப்பட்டுள்ளது. (சிறு. பாண்)

நெடுநல்வாடையில், சந்தனக் கட்டையிலே நெருப்புண்டாக்கி மகளிர் அகிலையும், கண்ட சருக்கரையும சேர்த்துத் தூவ் இதன புகையைக் காட்டி, கூந்தலை உலர்த்துவதும எத்தனை மருத்துவக் கருத்துக்கள் அடங்கியுள்ளன! இந்தப புகையில் கூந்தலுக்கு நறுமணம ஏற்படுவதுமன்றி, மண்டையில் வரக்கூடிய ஊறல் சிரங்குளுக்கும், ஈர், பேன் முதலியவைகளை அறவே ஒழிப்பதற்கும் தக்க மருந்தல்லவா?

இத்தகைய பண்டைய இலக்கியங்களை நாம் கை நழுவ விடலாமா? ஒவ்வொரு இல்லத்திலும் இதைப் படித்துப் படித்து வழக்கத்துக்குக் கொண்டுவர வேண்டாமா; இக்காலத்தில் நமது நாட்டில விளையும் மிளகைப் பயனபடுத்துவதை விட்டு, அயல் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட கொடிய மிளகாயைக் குழந்தைகளுக்கும் மிகுதியாகப் பயன்படுத்தி, வயிற்றளைச்சல், Dysentery) கல்லீரல் கட்டி (Cirrhosis of Liver) சிறுநீர் அடைதது உடல வீங்குதல் (Nephritis) முதலிய நோய்களில் எவ்வளவு பேர் மாண்டு வருகின்றனர். பண்டையோர் முறையைப் பின்பற்றுவோமாக. நமது நாட்டில், உண்டி சமைத்தல் ஒரு தனிக்கலையாயிருந்தது. சுவையில் அறுசுவை, உணவில் அரிசி, ஊறுகாய், வத்தல் சுண்டைக்காய், காய்கறிகளை எவ்வாறு பச்சையாயும், அவித்தும் சுட்டும் பொரித்தும கறி சமைத்தல், கிழங்குகளைப் பண்டமாக்குதல் இவைவெல்லாம உண்டி சமைப்பதிலும் நம் மூன்னோர் மிகத் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை விளக்குகின்றதல்லவா! உணவுக்குப் புழுங்கல் அரிசியைச் சமைப்பதினின்றே நம் மூன்னோரது நுழைபுலம் வெளியாகின்றது இன்று உலக மருத்துவர்கள ஒருங்கேகூடி புழுங்கல அரிசியே, பச்சரிசியை விட மேமபட்டதென்று உறுதிப்படுத்தியுள்ளனரே! புழுங்கல் அரிசியிலிருந்து தான கஞ்சித தண்ணீர் இரவில் விட்டு பாகப் படுத்திய பழைய சோறு கிடைக்கும். வெப்பம் மிகுந்த நம்நாட்டுக்குப் பழைய சோறு இன்றியமையாதென்பதை நம முன்னோர் அனுபவத்திற் கண்டனர். கோதுமையை விட அரிசி கெடுதி என்று கூறுபவரிடம், கோதுமையிலிருந்து பழைய சோறு உண்டாக்க முடியுமா என்று கேட்கவேண்டும. பல் விளக்குதல், பழைய சோறு ஆகுதல், எண்ணெய் தேய்த்துக் குளித்தல், பல தானியங்களை உணவோடு உபயோகித்தல், பண்ணியங்கள ஆக்குதல், மோர் சாபபிடுதல், நோன்பிருத்தல், ஊறுகாய் வற்றல் முதலியன போடுதல், காய்கறி கீரை இஞ்சி, வெந்தினை, வேப்பு, மிளகு நெல்லிக்காய் பயன்படுத்துதல், புலால் உண்ணாமை, எச்சில் விலக்குதல் இவையனைத்தும் பண்டைத் தமிழர் கண்ட முறை, இதை இனியாவது கடைப் பிடிப்போமாக.

— தொண்டன்

கற்றோர்க்கழகு கசடற மொழிதல்


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்காலத்திலேற்ற ... ... உத்தரவாதமுள்ளது

நகைகள் கிடைக்குமிடம்

எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியஸ்பநத
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாஙகலாம்.

தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாஙகவுமான விசேஷ ஒழுஙகுகள செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் இறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

மூலவியாதி அறவே அகற்றப்பட வேண்டுமானல்
பழனி, சி. எம். சாமி,
நாகபஸ்பம் | கருணைலேகியம்
... உபயோகியுங்கள் ...

- நாட்பட்டதானலும ஆப்ரேசனின்றிக் குணப்படுத்த இயலும்.
- மூலச் சூடு, மூல முளை, இரத்த மூலம், மல பந்தம், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் கொப்பளமுண்டாகுதல் முதலியன குணமாகின்றது.

| 24 வேளை டஸ்ம் புட்டி 1க்கு ரூ 5-0-0 | கருணைலேகியம் அரைசேர் புட்டி ரூ 2-8-0 |
|---|---|

ஏஜண்டு: S. பொன்னுச்சாமி பிள்ளை,
133 தபபகொடா தெரு, பலாங்கொடை.
* * *
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.

2

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும் | திறமான ரூணி மார்க் ஓடுகள் 13¾, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.


## திருத்தொண்டர் திருநாள்

### தம்பிரான் தோழனை ஈன்றுதவினர்

சடைய நாயனர் 31-12-52

திருநாவலூரிலே ஆதி சைவ குலத்திலே திருவவதாரஞ் செய்தார் சடையநாயனர். அவர் ஞான ஒளிபெற்ற உலகம் உய்தியடையும் பொருட்டு, சேரமான் துணைவனும் எமபிரான் தோழனுமாகி எம்பிரானைத் தூதனுப்புபான்மையராகியவரும் சமயாசாரியர் நால்வருள் ஒருவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனரை உலகுக்கு ஈன்றுதவிய பெரும் பேறுடையவர்.

"தம்பிரானைத் தோழமைகொண்
டருளித் தமது தடம்புயஞ்சேர்
கொம்பனர்பால் ஒருதூது செல்ல
ஏவிக் கொண்டருளும்
எம்பிரானைச் சேரமான் பெருமாள்
இணையில் துணைவராம
நம்பி யாருரைப்பயந்தார்
ஞால மெல்லாங் குடிவாழ '

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி
றெக்குவெஸ்துக் கோட்டில்
1. மீசாலை செல்லப்பா சதசிவமும்
2. பெண் சற்குணமும்
—வழக்காளிகள்.
இல. 224 எதிர்
1. சாவகச்சேரி விளுசித்தம்பி நாகலிங்கமும்
2. பெண் இராசம்மாவும்
3. மீசாலை முத்து செல்லையா
—எதிராளிகள்.

சாவகச்சேரி றெக்குவெஸ்துக் கோட்டில் 224ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின் விபரிக்கப்படுமாதனங்கள் 1953ம் ஆ தைமீ 28க்கு காலை 10 மணி தொடக்கம் அவ்வக் காணிகட்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— ரூபா 276/=ம 8-9-51 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் நூற்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 40-25 இதில் கொடுபட்ட பணம் ரூபா 50/= கழித்து மிகுதி.

ஆதனவிடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை பறையன் காட்டு வளவு சி. பர, 6. குளி 15. அளவையின்படி சி. பர 8 எட்டுக்கெல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் செல்லம்மாவின் பிள்ளைகளுக்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள், வடக்கு எதிரிகளுக்குரிய வாதனம் மேற்கு மார்க்கண்டையர் பெண் தங்கம்மாவுக்குரியவாதனம் தெற்கு பின குறிக்கப்படும் 2ம் ஆதனம் இதடங்கலும் பதிவு இல F 182/177

2. ஷ சாவகச்சேரியிறை பெரிய வளவும் தோட்டத்தில் வளவும் சி. பர, 9. குளி 10 இதில் வடக்குப் பக்கமாக சி. பர. 5. குளி 12. எல்லை கிழக்கு றோட்டு வடக்கு முற்கூறிய 1ம ஆதனமும் மயில்வாகனம் சோமசுந்தரத்துக்குரிய வாதனமும் மேற்கு மயில்வாகனம் சோமசுந்தரத்துக்குரிய வாதனம் தெற்கு ஒழுங்கை. இதடங்கலும் பதிவு F 182/178.

சாவகச்சேரி
1952ம் ஆ மார்கழிமீ 30க்கு

மு. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்,
M. 210 30—12—52.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai. Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. December 30. 1952.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org